முருகப்பெருமான் துணை

**மகான் சனிபகவானை தொடர்ந்து**
**மகான் ராகுபகவான் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

28.06.2021, திங்கட்கிழமை

1. உலகோர்க்கு பெருந்துணையாக
   உயர் ஞானமாக வந்தநல்
   காலமதை வென்ற ஞானியே
   கந்தவேலனின் சூட்சும வடிவே
2. வடிவேலனின் ஞான பலமே
   வள்ளலே உன் பெருமை கூறி
   இடரில்லா பிலவ மிதுன திங்கள்
   இயம்பிடுவேன் முன்னான்கீர் திகதி சோமவாரம்
   (பிலவ வருடம் ஆனி மாதம் 14ம் நாள், 28.06.2021 திங்கட்கிழமை)
3. வாரமதில் யோகபிரசன்ன ஆசி
   வழங்குவேன் ராகுபகவான் யானும்
   திறம்மிக்க ஞானவான்கள்தனை
   தேசம் எங்கும் படைக்க வேண்டி
4. வேண்டியே அவதாரம் புரிந்து
   வேதமாக சன்மார்க்கம் அருளி
   தொண்டாற்றும் ஞானியர் வழி
   தொண்டர்படைகளாக மக்கள் வர
5. வருகவே வையகம் எங்கிலும்
   வளரும் அரங்கன் நல்மார்க்கம்
   தருமம் கடைபிடிக்கும் படி
   தவராசன் உருவாக்கிய சேவை
6. சேவை அன்னதானமாக பரவிட
   செயல்வேகம் தன்னார்வ தொண்டாக
   அவனியெங்கும் பரவி இனிதே
   ஆளுமை ஞானமாக ஆகும்படி
7. ஆகும்படி இயக்கம் பெருகிவர
   அரங்கன் தேடும் ஞானஆட்சி
   வகையாக உலகம் காணும்
   வையகமே மாற்றம் பெறும்
8. மாற்றம் தரும் சிறந்த யோகி
   மறுமை மரணம் வென்ற ஞானி
   ஆற்றல் தரும் ஆறுமுகப்பெருமான்
   அவதாரஞானி ஞான தேசிகன்
9. தேசிகன் அமைத்த பிரணவக்குடிலை
   தேடிவந்து உலக மக்கள்
   ஆசி ஏற்று ஞான தீட்சை
   அடைந்து வருகவே கலியுகம்

10. கலியுகம் தன் இன்னலை
கருணைபட அகற்றி நன்கு
அழியாமை சக்தி நிரம்பியே நன்கு
அனைவரும் ஞானிகள் ஆவர்

11. ஆகவே அரங்கன் வழிவர
அற்புதம் கண்டு உலகம்
யுகமாற்றம் சடுதி காணும்
உரைத்திட்ட யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–